நகராட்சி அலுவலகம்,
சத்தியமங்கலம்.
நாள் :28.06.2022

**2022-ஆம் ஆண்டு ஜீன் மாதம் 28.06 .2022-ஆம் தேதி செவ்வாய் கிழமை மாலை 4.00 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தின் நடவடிக்கைகள்**

**பொருள் : 1**

சத்தியமங்கலம் நகராட்சி ஆணையாளர் திரு.மெ.சரவணகுமார் அவர்களின் ஏப்ரல் மற்றும் மே 2022-ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(கட்டு எண்.528/2022/சி1)

தீர்மானம் எண் : 70 பதிவு செய்யப்பட்டது. நாள் 28.06.2022

**பொருள் : 2**

**(திருத்தப்பட்ட அறிவிக்கை 1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 81–A மற்றும் தீர்மானம் எண்.35 நாள். 11.04.2022 இன் கீழ் வெளியிடப்படுகிறது)**

அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களைப் பின்பற்றி சத்தியமங்கலம் நகராட்சியில் 01.04.2022 முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்வதற்கான மண்டல வாரியாக அடிப்படை மதிப்பு தொகையை நிர்ணயம் செய்தும்,

பொதுசீராய்வுக்குப் பின் (2023–2024 ஆம் ஆண்டு முதல்) உள்ள சொத்துவரி தொகையில் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளில் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ளவும் 11.04.2022 ஆம் தேதிய 35 ஆம் எண் தீர்மானத்தில் முடிவு செய்துள்ளது.

மேற்குறிப்பிட்ட நகர்மன்ற தீர்மானத்தை பொதுமக்கள் அறிந்து கொள்ளவும், பொதுமக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் இருந்தால் நகராட்சி ஆணையருக்கு 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் தெரிவிக்கலாம் என்ற பொது அறிவிப்பு மாலைமலர் மற்றும் தினகரன் தமிழ்நாளிதழில் 14.04.2022 ஆம் தேதியிலும், Afternoon என்ற ஆங்கில நாளிதழில் 14.04.2022 ஆம் தேதியிலும் வெளியிடப்பட்டது.

சத்தியமங்கலம் நகராட்சியின் பொது அறிவிப்பின் பேரில் பொது மக்கள் மற்றும் அரசியல் கட்சியினரிடமிருந்து மொத்தம் 4800 ஆட்சேபணைகள் வரப்பட்டு, அதனை மன்றத்தில் பதிவு செய்து மேற்குறிப்பிட்ட 11.04.2022 தீர்மானத்தில் நிர்ணயிக்கப்பட்ட திருத்தப்பட்ட சொத்துவரி பொது சீராய்வு அடிப்படை மதிப்பினை கீழ்கண்டவாறு உறுதி செய்ய மன்றம் தீர்மானம் எண்.69–ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

## <u>2022–2023 நிதியாண்டின் முதல் அரையாண்டு முதல் உயர்வு செய்யப்பட்டுள்ள சொத்துவரி பொது சீராய்வு மற்றும் மண்டல மதிப்பு விவரம்</u>

### சொத்து வரி சீராய்வுக்கான மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்தல்

| வ. எண் | மண்டலம் | அடிப்படை மதிப்பு | குடியிருப்பு (சதுரடி) | | | | வணிகம் | தொழிற் கூடம் | கல்வி நிறுவனங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 - 600 | 601 – 1200 | 1201–1800 | 1801 க்கு மேல் | | | |
| 1 | A | 2.30 | 2.875 | 3.45 | 4.025 | 4.60 | 4.60 | 4.025 | 4.025 |
| 2 | B | 2.00 | 2.50 | 3.00 | 3.50 | 4.00 | 4.00 | 3.50 | 3.50 |
| 3 | C | 1.40 | 1.75 | 2.10 | 2.45 | 2.80 | 2.80 | 2.45 | 2.45 |
| 4 | D | 1.10 | 1.375 | 1.65 | 1.925 | 2.20 | 2.20 | 1.925 | 1.925 |

பொது சீராய்வில் நிர்ணயிக்கப்படும் ஆண்டு மதிப்பில் தற்போது அமுலில் உள்ள சொத்துவரி விகிதமான 8% சதவீதம் அரையாண்டு வரியாக நிர்ணயம் செய்யப்படும்

**காலிமனை வரி சீராய்வுக்கான மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்தல்**

காலிமனை வரி விதிப்பிற்கு 1 சதுரடி நிலத்திற்கு தற்போது உள்ள அடிப்படைமதிப்பு 100 % உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்படும்.

| வ.எண் | தற்போதைய மண்டலம் | ஏற்கனவே உள்ள மண்டல மதிப்பு | புதிதாக நிர்ணயிக்கப்பட்ட மண்டல மதிப்பு |
|---|---|---|---|
| 1 | A | 0.35 | 0.70 |
| 2 | B | 0.25 | 0.50 |
| 3 | C | 0.20 | 0.40 |

**சொத்துவரி விதிப்பின் கூறுகள் நகர்மன்றம் தீர்மானம் முன் அனுமதி நாள். 19.05.2022**

| பொதுநிதி | கல்வி வரி | நூலக வரி | மொத்தம் |
|---|---|---|---|
| 5 | 2.5 | 0.50 | 8 |

## தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டு தோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனைவரி உயர்வு செய்து சொத்து வரி சீராய்வு மேற்கொள்ளப்படும்.

## திருத்தியமைக்கப்பட்டுள்ள வார்டு மறுவரையின்படி புதிய வார்டுகள் வாரியாக தெருக்களின் விவரம்

| வ. எண் | பழைய வார்டு எண் | புதிய வார்டு எண். | தெருவின் பெயர் | மண்டலம் |
|---|---|---|---|---|
| 1 | 1 | 19 | கடை வீதி | ZONE B |
| 2 | 1 | 1 | கோட்டுவீராம்பாளையம் ரூரல் | ZONE D |
| 3 | 1 | 19 | கடை வீதி ( ஐயப்பன் நகர்) | ZONE C |
| 4 | 1 | 1 | கோட்டுவீராம்பாளையம் ரூரல் (தனவாசி ரோடு) | ZONE D |
| 5 | 1 | 1 | கோட்டுவீராம்பாளையம் ரூரல் (மாரியம்மன் கோவில் வீதி) | ZONE D |
| 6 | 1 | 1 | கோட்டுவீராம்பாளையம் ரூரல் (ஆண்டவர் நகர்) | ZONE D |
| 7 | 1 | 1 | கோட்டுவீராம்பாளையம் ரூரல் ( கே.ஆர்.எஸ். நகர்) | ZONE D |
| 8 | 1 | 1 | கோட்டுவீராம்பாளையம் ரூரல் (எம்.ஜி.ஆர். நகர்) | ZONE D |
| 9 | 1 | 1 | கோட்டுவீராம்பாளையம் ரூரல் (கோம்புபள்ளம்) | ZONE D |
| 10 | 2 | 2 | வரதம்பாளையம் ரூரல் – ராஜீவ் நகர் | ZONE D |
| 11 | 2 | 2 | வரதம்பாளையம் ரூரல் | ZONE D |
| 12 | 2 | 2 | வரதம்பாளையம் ரூரல் – ஜெ. ஜெ. நகர் | ZONE D |
| 13 | 2 | 2 | திப்புசுல்தான் ரோடு | ZONE C |
| 14 | 2 | 16 | வரதம்பாளையம் ரூரல் – சௌடேஸ்வரி நகர் | ZONE C |
| 15 | 2 | 16 | வரதம்பாளையம் ரூரல் – பாக்கியலட்சுமி நகர் | ZONE C |
| 16 | 2 | 2 | எஸ்.கே.வி. அவின்யூ | ZONE D |
| 17 | 2 | 2 | பெரியகுளம் | ZONE D |
| 18 | 2 | 2 | நாடார் காலனி | ZONE D |
| 19 | 2 | 2 | சுவாமி நகர் | ZONE D |
| 20 | 3 | 4 | வரதம்பாளையம் ரூரல் – 2 ( பிரிட்டோ காலனி) | ZONE D |
| 21 | 3 | 4 | வரதம்பாளையம் ரூரல் – 2 ( தந்தை பெரியார் நகர்) | ZONE D |
| 22 | 3 | 4 | திப்பு சுல்தான் ரோடு | ZONE C |
| 23 | 3 | 4 | சத்தியமங்கலம் ரூரல் | ZONE D |
| 24 | 3 | 3 | வரதம்பாளையம் ரூரல் – குள்ளங்கரடு | ZONE D |
| 25 | 3 | 4 | வரதம்பாளையம் ரூரல் – லட்சுமி நகர் | ZONE D |
| 26 | 3 | 3 | வரதம்பாளையம் ரூரல் | ZONE D |
| 27 | 3 | 4 | வரதம்பாளையம் ரூரல் – ஓம் சக்தி நகர் | ZONE D |

| | | | | |
|---|---|---|---|---|
| 28 | 3 | 4 | வரதம்பாளையம் ரூரல் –1 | ZONE D |
| 29 | 3 | 4 | வரதம்பாளையம் ரூரல் –3 | ZONE D |
| 30 | 3 | 3 | வரதம்பாளையம் ரூரல் – சுசீந்திரம் லே–அவுட் | ZONE D |
| 31 | 3 | 3 | மாதேஸ்வரன் கோயில் ரோடு | ZONE D |
| 32 | 3 | 4 | பாரதி நகர் எக்ஸ்டன்சன் –1 ( மாருதி நகர்) | ZONE D |
| 33 | 3 | 4 | அன்பு நகர் | ZONE D |
| 34 | 3 | 4 | உருமையன் ரோடு | ZONE D |
| 35 | 3 | 3 | பெரிய குளம் | ZONE D |
| 36 | 3 | 4 | லட்சுமி நகர் எக்ஸ்டன்சன் | ZONE D |
| 37 | 3 | 4 | குமாரசாமி லே–அவுட் | ZONE D |
| 38 | 3 | 3 | சின்ன குளம் புதூர் | ZONE D |
| 39 | 3 | 3 | வரதம்பாளையம் ரூரல் ( ராஜீவ் நகர்) | ZONE D |
| 40 | 3 | 4 | வரதம்பாளையம் ரூரல் ( இந்திரா நகர் ரோடு) | ZONE D |
| 41 | 4 | 4 | உருமையன் வீதி | ZONE D |
| 42 | 4 | 4 | வீரபத்திரசாமி கோயில் கிழக்கு வீதி | ZONE D |
| 43 | 4 | 4 | தண்டுமாரியம்மன் கோயில் மேற்கு சந்து | ZONE D |
| 44 | 4 | 6 | திப்பு சுல்தான் ரோடு | ZONE C |
| 45 | 5 | 6 | திப்பு சுல்தான் ரோடு | ZONE C |
| 46 | 5 | 6 | பாரஸ்ட் டிப்போ வடக்கு வீதி | ZONE D |
| 47 | 5 | 6 | தண்டுமாரியம்மன் கோயில் வடக்கு சந்து | ZONE D |
| 48 | 5 | 6 | தண்டுமாரியம்மன் கோயில் வீதி – 4 | ZONE D |
| 49 | 5 | 6 | தண்டுமாரியம்மன் கோயில் வீதி – 6 | ZONE D |
| 50 | 5 | 6 | தண்டுமாரியம்மன் கோயில் மேற்கு வீதி | ZONE D |
| 51 | 6 | 7 | பாரஸ்ட் டிப்போ வடக்கு வீதி | ZONE D |
| 52 | 6 | 7 | தண்டுமாரியம்மன் கோயில் வீதி – 1 | ZONE D |
| 53 | 6 | 7 | தண்டுமாரியம்மன் கோயில் வீதி – 5 | ZONE D |
| 54 | 6 | 7 | தண்டுமாரியம்மன் கோயில் வீதி – 4 | ZONE D |
| 55 | 6 | 8 | திப்பு சுல்தான் ரோடு | ZONE C |
| 56 | 7 | 8 | அன்னையன் வீதி | ZONE D |
| 57 | 7 | 8 | தண்டுமாரியம்மன் கோயில் வீதி – 2 | ZONE D |
| 58 | 7 | 7 | தண்டுமாரியம்மன் கோயில் வீதி – 3 | ZONE D |
| 59 | 7 | 7 | தண்டுமாரியம்மன் கோயில் வீதி – 7 | ZONE D |
| 60 | 8 | 8 | திப்பு சுல்தான் ரோடு | ZONE C |
| 61 | 8 | 9 | திருநீலகண்டர் கல்யாண மண்டபம் சந்து | ZONE C |
| 62 | 8 | 8 | அன்னையன் கிழக்கு வீதி | ZONE D |
| 63 | 8 | 8 | அன்னையன் சந்து | ZONE D |
| 64 | 8 | 9 | தண்டல் ரஹ்மான் சந்து | ZONE D |
| 65 | 8 | 8 | தண்டுமாரியம்மன் கோயில் வீதி – 2 | ZONE D |
| 66 | 8 | 9 | தண்டுமாரியம்மன் கோயில் வீதி – 4 | ZONE D |
| 67 | 9 | 5 | சத்தி ரூரல் – இந்திரா நகர் | ZONE D |
| 68 | 9 | 5 | சத்தி ரூரல் | ZONE D |
| 69 | 9 | 5 | சத்தி ரூரல் – குள்ளங்கரடு | ZONE D |
| 70 | 9 | 5 | சத்தி ரூரல் – ஓட்டக்குட்டை ரோடு | ZONE D |
| 71 | 9 | 5 | சத்தி ரூரல் – அண்ணா நகர் | ZONE D |
| 72 | 9 | 5 | சத்தி ரூரல் – காமராஜ் நகர் | ZONE D |
| 73 | 9 | 10 | சத்தி ரூரல் – புளியங்கோம்பை ரோடு | ZONE D |
| 74 | 9 | 10 | சத்தி ரூரல் – ஆண்டவர் நகர் | ZONE D |
| 75 | 9 | 5 | சத்தி ரூரல் – அய்யப்பா நகர் | ZONE D |
| 76 | 9 | 5 | சத்தி ரூரல் – கிட்டையா காலனி | ZONE D |
| 77 | 9 | 5 | ஆசிரியர் காலனி | ZONE D |
| 78 | 9 | 5 | சத்தி நகர் | ZONE D |

| | | | | |
|---|---|---|---|---|
| 79 | 9 | 5 | முல்லை நகர் | ZONE D |
| 80 | 9 | 5 | பாண்டியன் நகர் | ZONE D |
| 81 | 9 | 5 | குறிஞ்சி நகர் | ZONE D |
| 82 | 9 | 10 | புளியங்கோம்பை காலனி ( மேற்கு பகுதி) | ZONE D |
| 83 | 9 | 5 | பி.எஸ்.என்.எல். நகர் | ZONE D |
| 84 | 9 | 10 | மகாலட்சுமி நகர் | ZONE D |
| 85 | 9 | 5 | டி.எஸ். நகர் ( ஓட்டக்குட்டை ரோடு) | ZONE D |
| 86 | 9 | 5 | காமதேனு நகர் | ZONE D |
| 87 | 10 | 10 | சத்தியமங்கலம் ரூரல் ( புளியங்கோம்பை ரோடு) | ZONE D |
| 88 | 10 | 9 | பாரஸ்ட் டிப்போ கிழக்கு வீதி –1 (கட்டபொம்மன் நகர்) | ZONE D |
| 89 | 10 | 9 | பாரஸ்ட் டிப்போ கிழக்கு வீதி –2 (கட்டபொம்மன் நகர்) | ZONE D |
| 90 | 10 | 9 | பாரஸ்ட் டிப்போ கிழக்கு வீதி | ZONE D |
| 91 | 10 | 10 | புளியங்கோம்பை கிழக்கு வீதி | ZONE D |
| 92 | 10 | 10 | கம்பத்ராயன் புதூர் | ZONE D |
| 93 | 10 | 10 | மொண்டிகரடு | ZONE D |
| 94 | 10 | 10 | பாசக்குட்டை ரோடு ( புதுவலவு) | ZONE D |
| 95 | 10 | 10 | புளியங்கோம்பை ரோடு ( ராசி நகர்) | ZONE D |
| 96 | 10 | 10 | புளியங்கோம்பை ரோடு ( நட்சத்திரா கார்டன்) | ZONE D |
| 97 | 11 | 11 | அத்தாணி ரோடு | ZONE B |
| 98 | 11 | 11 | அத்தாணி ரோடு சந்து எண். 1 ( ராஜீவ் நகர்) | ZONE C |
| 99 | 11 | 11 | கச்சேரி வீதி | ZONE C |
| 100 | 11 | 11 | சத்தி ரூரல் ( அத்தாணி ரோடு ) | ZONE D |
| 101 | 11 | 11 | சத்தி ரூரல் ( கொடிவேரி ரோடு) | ZONE D |
| 102 | 11 | 11 | சத்தி ரூரல் ஜெய்கேந்திரா சிட்டி | ZONE D |
| 103 | 11 | 11 | சத்தி ரூரல் ஆண்டவர் நகர் | ZONE D |
| 104 | 11 | 11 | சத்தி ரூரல் – தென்றல் நகர் –1 | ZONE D |
| 105 | 11 | 11 | அத்தாணி ரோடு ( எம். ஜி. ஆர் காலனி) | ZONE D |
| 106 | 11 | 11 | சத்தி ரூரல் காசிக்காடு ரோடு | ZONE D |
| 107 | 11 | 11 | சத்தி ரூரல் – தென்றல் நகர் –2 | ZONE D |
| 108 | 11 | 11 | சத்தி ரூரல் – தென்றல் நகர் – 3 | ZONE D |
| 109 | 11 | 11 | சத்தி ரூரல் காசிக்காடு | ZONE D |
| 110 | 11 | 11 | ராஜீவ் நகர் ( எக்ஸ்டன்சன்) | ZONE C |
| 111 | 12 | 12 | அத்தாணி ரோடு சந்து எண் –2 | ZONE C |
| 112 | 12 | 12 | நகராட்சிப் பள்ளி வடக்கு வீதி | ZONE D |
| 113 | 12 | 12 | நகராட்சிப் பள்ளி வடக்கு வீதி – 1 | ZONE D |
| 114 | 12 | 12 | நகராட்சிப் பள்ளி வடக்கு வீதி – 2 | ZONE D |
| 115 | 12 | 12 | வடக்குப் பேட்டை ரோடு | ZONE C |
| 116 | 12 | 12 | வடக்குப் பேட்டை ரோடு சந்து எண். 1 | ZONE D |
| 117 | 13 | 13 | பத்ரகாளியம்மன் கோயில் வீதி | ZONE D |
| 118 | 13 | 13 | பத்ரகாளியம்மன் கோயில் கிழக்கு (பண்ணாரியம்மன் நகர்) | ZONE D |
| 119 | 13 | 14 | வெங்கடாசலம் பெரிய வீதி | ZONE D |
| 120 | 13 | 13 | பத்ரகாளியம்மன் கோயில் கிழக்கு வீதி | ZONE D |
| 121 | 13 | 16 | பத்ரகாளியம்மன் கோயில் மேற்கு வீதி | ZONE D |
| 122 | 14 | 14 | வெங்கடாசலம் பெரிய வீதி | ZONE D |
| 123 | 14 | 14 | வெங்கடாசலம் சின்ன வீதி | ZONE D |
| 124 | 15 | 15 | மாரியம்மன் கோயில் வீதி | ZONE D |
| 125 | 15 | 15 | மாரியம்மன் கோயில் வீதி – 1 | ZONE D |

| | | | | |
|---|---|---|---|---|
| 126 | 15 | 15 | மாரியம்மன் கோயில் வீதி – 2 | ZONE D |
| 127 | 15 | 15 | பெரிய பள்ளி வாசல் மேற்கு வீதி | ZONE D |
| 128 | 15 | 15 | பெருவாயப்பன் வீதி | ZONE D |
| 129 | 16 | 16 | பத்ரகாளியம்மன் கோயில் புது சந்து | ZONE D |
| 130 | 16 | 16 | பத்ரகாளியம்மன் கோயில் புது வீதி | ZONE D |
| 131 | 16 | 16 | பத்ரகாளியம்மன் கோயில் மேற்கு வீதி | ZONE D |
| 132 | 16 | 15 | கிருஷ்ணன் மேற்கு சந்து | ZONE D |
| 133 | 16 | 15 | பத்ரகாளியம்மன் கோயில் வீதி | ZONE C |
| 134 | 17 | 17 | தோப்பூர் காலனி வீதி – 1 | ZONE D |
| 135 | 17 | 17 | தோப்பூர் காலனி வீதி – 3 | ZONE D |
| 136 | 17 | 17 | தோப்பூர் காலனி வீதி – 2 | ZONE D |
| 137 | 18 | 18 | கடைவீதி சின்னதேவாங்கபுரம் | ZONE D |
| 138 | 18 | 18 | மில்ரோடு | ZONE D |
| 139 | 18 | 18 | சௌடம்மன் கோவில் வீதி | ZONE D |
| 140 | 18 | 18 | சௌடம்மன் கோவில் வீதி – 1 | ZONE D |
| 141 | 18 | 18 | சௌடம்மன் கோவில் வீதி –2 | ZONE D |
| 142 | 18 | 18 | பத்ரகாளியம்மன் கோயில் புது வீதி | ZONE D |
| 143 | 18 | 18 | கடை வீதி | ZONE B |
| 144 | 18 | 18 | ஸ்ரீபாலாஜி நகர் | ZONE C |
| 145 | 19 | 19 | மாரியம்மன் கோவில் வீதி | ZONE D |
| 146 | 19 | 19 | முனியப்பன் கோவில் வீதி – 1 | ZONE D |
| 147 | 19 | 19 | முனியப்பன் கோவில் வீதி – 2 | ZONE D |
| 148 | 19 | 19 | பிள்யைார் கோவில் வீதி | ZONE D |
| 149 | 19 | 19 | கடை வீதி ( ஐயப்பன் நகர் ) | ZONE D |
| 150 | 19 | 19 | கடை வீதி | ZONE A |
| 151 | 20 | 20 | மத்திமரத்துறை சந்து | ZONE D |
| 152 | 20 | 20 | பழைய தபால் ஆபீஸ் தெற்கு வீதி – 1 | ZONE D |
| 153 | 20 | 20 | பழைய தபால் ஆபீஸ் தெற்கு வீதி – 2 | ZONE D |
| 154 | 20 | 20 | பழைய தபால் ஆபீஸ் தெற்கு வீதி – 3 | ZONE D |
| 155 | 20 | 20 | பழைய தபால் ஆபீஸ் தெற்கு வீதி – 4 | ZONE D |
| 156 | 20 | 20 | பழைய தபால் ஆபீஸ் வீதி | ZONE B |
| 157 | 21 | 21 | பீமர் வீதி | ZONE D |
| 158 | 21 | 21 | காமாட்சியர் வீதி | ZONE D |
| 159 | 21 | 21 | மீனாட்சியம்மன் கோவில் மேற்கு வீதி | ZONE C |
| 160 | 21 | 21 | மீனாட்சியம்மன் கோவில் வீதி | ZONE C |
| 161 | 21 | 21 | வெங்கிடுதாசர் வீதி | ZONE C |
| 162 | 21 | 21 | மாமரத்துறை சந்து | ZONE D |
| 163 | 21 | 21 | பழைய தபால் ஆபீஸ் மேற்கு சந்து | ZONE D |
| 164 | 21 | 21 | பரிசல்துறை சந்து | ZONE D |
| 165 | 21 | 21 | பரிசல்துறை வீதி | ZONE D |
| 166 | 22 | 21 | பிள்ளையார் கோவில் வீதி | ZONE D |
| 167 | 22 | 22 | வாசுதேவன் வீதி | ZONE D |
| 168 | 22 | 22 | பெரியதபால் ஆபீஸ் தெற்கு வீதி | ZONE D |
| 169 | 22 | 22 | வேணுகோபாலசாமி கோவில் மேற்கு சந்து | ZONE D |
| 170 | 22 | 22 | பெரிய கடை வீதி | ZONE A |

| | | | | |
|---|---|---|---|---|
| 171 | 22 | 22 | மார்க்கெட் ரோடு | ZONE B |
| 172 | 22 | 22 | வேணுகோபாலசாமி கோவில் வீதி | ZONE B |
| 173 | 23 | 23 | மைசூர் டிரங்க் ரோடு | ZONE A |
| 174 | 23 | 23 | மைசூர் டிரங்க் ரோடு எக்ஸ்டன்சன் | ZONE C |
| 175 | 23 | 23 | தேள் கரடு காலனி ( அண்ணா நகர்) | ZONE D |
| 176 | 23 | 23 | கரட்டூர் ரோடு | ZONE B |
| 177 | 23 | 23 | வி. ஐ. பி நகர் | ZONE B |
| 178 | 23 | 23 | சுசில் கார்டன் | ZONE B |
| 179 | 24 | 25 | எக்ஸ்டன்சன் வீதி – 3 | ZONE C |
| 180 | 24 | 25 | எக்ஸ்டன்சன் வீதி – 4 | ZONE C |
| 181 | 24 | 25 | எக்ஸ்டன்சன் வீதி – 5 | ZONE C |
| 182 | 24 | 25 | எக்ஸ்டன்சன் வீதி – 6 | ZONE C |
| 183 | 24 | 25 | கோவிந்தராஜபுரம் வீதி – 2<br>( எக்ஸ்டன்சன் வீதி – 2) | ZONE C |
| 184 | 24 | 25 | கோவிந்தராஜபுரம் வீதி – 1 | ZONE D |
| 185 | 25 | 25 | கோவிந்தராஜபுரம் வீதி – 3 | ZONE D |
| 186 | 25 | 25 | கோவிந்தராஜபுரம் வீதி – 2 | ZONE D |
| 187 | 25 | 25 | கோவிந்தராஜபுரம் வீதி – 5 | ZONE D |
| 188 | 25 | 26 | கூத்தனூர் ரோடு | ZONE D |
| 189 | 25 | 25 | கோவிந்தராஜபுரம் வீதி – 4 | ZONE D |
| 190 | 25 | 26 | கூத்தனூர் ரோடு சந்து – 2 ( ஆர். எம். பி. நகர் ) | ZONE C |
| 191 | 25 | 26 | கூத்தனூர் ரோடு சந்து – 1 (கண்ணப்பன் லே அவுட்) | ZONE C |
| 192 | 25 | 26 | மேட்டுப்பாளையம் ரோடு சந்து எண். 1 ( திருநகர் காலனி) | ZONE C |
| 193 | 25 | 26 | மேட்டுப்பாளையம் ரோடு சந்து எண். 2 ( திருநகர் காலனி) | ZONE C |
| 194 | 25 | 26 | மேட்டுப்பாளையம் ரோடு சந்து எண். 3 ( திருநகர் காலனி) | ZONE C |
| 195 | 25 | 26 | மேட்டுப்பாளையம் ரோடு சந்து எண். 4 ( திருநகர் காலனி) | ZONE C |
| 196 | 25 | 26 | மேட்டுப்பாளையம் ரோடு சந்து எண். 5 ( திருநகர் காலனி) | ZONE C |
| 197 | 25 | 26 | மேட்டுப்பாளையம் ரோடு சந்து எண். 6 ( திருநகர் காலனி) | ZONE C |
| 198 | 25 | 25 | பரிசல்துறை வீதி | ZONE C |
| 199 | 25 | 26,27 | மேட்டுப்பாளையம் மெயின் ரோடு | ZONE B |
| 200 | 25 | 26 | மேட்டுப்பாளையம் ரோடு சந்து எண். 7 ( திருநகர் காலனி) | ZONE C |
| 201 | 25 | 27 | எஸ்.டி.செட் ரோடு | ZONE C |
| 202 | 25 | 26 | மேட்டுப்பாளையம் ரோடு சந்து எண். 8 ( திருநகர் காலனி) | ZONE C |
| 203 | 25 | 27 | என். ஏ. எஸ். திருமால் நகர் | ZONE C |
| 204 | 25 | 26 | கூத்தனூர் ரோடு எஸ். ஆர். டி. கார்டன் | ZONE D |
| 205 | 25 | 26 | கூத்தனூர் ரோடு ஏஞ்சல் நகர் | ZONE D |
| 206 | 25 | 26 | கூத்தனூர் ரோடு கண்ணப்பன் லே அவுட் சந்து 2 | ZONE C |
| 207 | 26 | 24 | எக்ஸ்டன்சன் வீதி – 1 | ZONE C |
| 208 | 26 | 24 | ஜல்லிக்குழி மெயின் வீதி | ZONE D |
| 209 | 26 | 24 | பிள்ளையார் கோவில் வீதி | ZONE D |
| 210 | 26 | 24 | தேள்கரடு வீதி – 1 | ZONE D |
| 211 | 26 | 24 | தேள்கரடு வீதி – 2 | ZONE D |
| 212 | 26 | 24 | தேள்கரடு வீதி – 3 | ZONE D |
| 213 | 26 | 24 | தேள்கரடு வீதி – 4 | ZONE D |

| | | | | |
|---|---|---|---|---|
| 214 | 26 | 24 | தேள்கரடு வீதி – 5 | ZONE D |
| 215 | 26 | 24 | SMZ அவென்யூ | ZONE D |
| 216 | 27 | 23 | ரங்கசமுத்திரம் சந்து எண். 1 | ZONE C |
| 217 | 27 | 27 | ரங்கசமுத்திரம் சந்து எண். 10 | ZONE C |
| 218 | 27 | 27 | ரங்கசமுத்திரம் சந்து எண். 11 | ZONE C |
| 219 | 27 | 23,27 | மைசூர் டிரங்க் ரோடு | ZONE A |
| 220 | 27 | 27 | ரங்கசமுத்திரம் சந்து எண். 4 | ZONE C |
| 221 | 27 | 27 | ரங்கசமுத்திரம் சந்து எண். 5 | ZONE C |
| 222 | 27 | 27 | ரங்கசமுத்திரம் சந்து எண். 6 | ZONE C |
| 223 | 27 | 27 | ரங்கசமுத்திரம் சந்து எண். 7 | ZONE C |
| 224 | 27 | 27 | ரங்கசமுத்திரம் சந்து எண். 8 | ZONE C |
| 225 | 27 | 27 | ரங்கசமுத்திரம் சந்து எண். 9 | ZONE C |
| 226 | 27 | 27 | ரங்கசமுத்திரம் சந்து எண். 12 | ZONE C |
| 227 | 27 | 27 | ரங்கசமுத்திரம் சந்து எண். 13 | ZONE C |
| 228 | 27 | 27 | ரங்கசமுத்திரம் சந்து எண். 14 | ZONE C |
| 229 | 27 | 27 | ரங்கசமுத்திரம் சந்து எண். 15 | ZONE C |
| 230 | 27 | 27 | ரங்கசமுத்திரம் சந்து எண். 2 | ZONE C |
| 231 | 27 | 27 | ரங்கசமுத்திரம் சந்து எண். 3 | ZONE C |
| 232 | 27 | 27 | குமரன் நகர் | ZONE C |
| 233 | 27 | 27 | எம். கே. லே. அவுட் | ZONE C |

**அலுவலகக்குறிப்பு :**

மேற்கண்ட மண்டலங்களின் படி பொது சீராய்வு மேற்கொள்ளவும் மற்றும் புதிய வரி விதிப்புகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் மற்றும் அவசரம் அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று மாவட்ட அரசிதழில் பிரசரம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எண். 626/2022/அ1)

தீர்மானம் எண் : 71 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

1. பொதுமக்களின் ஆட்சேபணை மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களின் ஆட்சேபணை ஆகியவற்றினை கருத்தில் கொண்டு மண்டல மதிப்பில் திருத்தி அமைக்கப்பட்டுள்ள வார்டு மறு வரையறையின்படி புதிய வார்டுகள் வாரியாக, தெருக்களின் வாரியாக மண்டல மதிப்பு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது என தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் : 3**

நகரின் அபிவிருத்திகளை கருதியும் முன்னாள் பஞ்சாயத்தின் வரிவிகிதங்களை மனதில் கொண்டும் சத்தியமங்கலம் நகராட்சியின் சொத்து வரியினை நகர்மன்ற தீர்மான எண்.27 நாள். 25.05.1970-ம் தேதி கீழ்க்கண்டவாறு சொத்துவரி விதிப்பு விகிதம் 01.04.1970 ம் தேதியிலிருந்து சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் முதல் முறையாக கீழே குறிப்பிட்டுள்ள அட்டவணையின்படி அரைவருட வரிகள் விதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. அதன்படி தற்போது வரை நடைமுறைப்படுத்தபட்டு வருகிறது.

**1. சொத்துவரி- அரைவருடவரிவிபரம்**

| விபரம் | பிரிவு 81(1), 81(3) |
|---|---|
| எந்தகாரியத்திற்காக | கட்டிடங்களும் கட்டிடங்களை சார்ந்த காலி நிலங்களும். விவசாயத்திற்கு பயன்படுத்தப்படாததும் கட்டிடங்களை சேர்ந்தாற்போல் இல்லாத காலி நிலங்கள் |

| | கட்டிடங்கள் வருட வாரியாக மதிப்பின் பேரில் |
|---|---|
| a) பொதுக் காரியங்களுக்கு வரி | 1% |
| b) தண்ணீர் வரி | 3 ¼ % |
| c) உரக்கடைவரி | ½ % |
| d) துப்புரவுவரி | 1 ¼ % |
| e) விளக்குவரி | 2% |
| **அரைவருட வரி மொத்தம்** | **8%** |

**குறிப்பு:**

கல்வி வரி நீங்கலாக இதரவரி ஒவ்வொரு முழுசதுரடிக்கு 0.03 (மூன்று) பைசாவீதம் நூல் நிலை செஸ் வசூலிக்கப்படும்.

**2) கல்வி வரி**

திருத்தப்பட்ட 1920-ஆம் வருடத்திய தமிழ்நாடு ஆரம்ப கல்வி சட்டம் பிரிவு-34, 35-ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் இம்மன்றம் 1.4.1970ஆம் தேதியிலிருந்து சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் முதல் முறையாக கீழே குறிப்பிட்டுள்ளஅட்டவணைப்படி கல்வி வரி விதிக்க உத்தேசிக்கப்பட்டது.

| வ.எண். | கல்விவரி | அரைவருடவரி |
|---|---|---|
| 1. | கட்டிடங்களின் மீதும் கட்டிடங்களை சேர்ந்த காலி நிலங்களின் மீதும் மற்றும் விவசாயத்திற்கு பயன்படுத்தப்படாததும் கட்டிடங்களை சேர்ந்தாற் போல் இல்லாத காலி நிலங்கள் மீதும். | 1920ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 81(1)-ன் கீழ் கட்டிடங்களுக்கும் கட்டிடத்தை சேர்ந்த காலி நிலங்களின் மீதும் வருட வாடகை மதிப்பின் பேரில் விதிக்கப்படும் 8% சொத்து வரியுடன் கூடுதலாக 2 ½%. |

தற்போது அரசாணை நிலை எண். 52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி4) துறை நாள். 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்.1 நாள்.01.04.2022- ன்படி முதல் அரையாண்டு 01.04.2022 முதல் சொத்துவரி, காலியிட வரி, வரி பொது சீராய்வு குறித்து மண்டல அடிப்படையிலான மதிப்பீடுகளை வழிகாட்டி நடைமுறைகளின்படி பழைய மண்டல மதிப்பீட்டினை 100% சதவீதம் உயர்வு செய்து, வரி சீராய்வு மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, வரி சீராய்வு குறித்து 3 நாளிதழ்களில் பொது மக்கள் அறியும் வண்ணம் விளம்பரம் செய்யப்பட்டது.

இதில் வரியானது மிகவும் அதிகம் என பொது மக்களிடம் இருந்து அதிகளவில் ஆட்சேபணைகள் வரப்பெற்றுள்ளது. சத்தியமங்கலம் நகராட்சியில் மொத்தம் 27 வார்டுகளில் இதில் மூன்றில் இரண்டு பங்கு விவசாய நிலமாகும். மக்கள் அனைவரும் விவசாயப் பணியினை மேற்கொண்டு வருவதால், மிக குறைந்து வருமானத்தில் குடும்ப நடத்தப்படும் நிலையில் தற்போது உயர்வு செய்யும் வரி மிகவும் அதிகம் என ஆட்சேபணை மனு மூலம் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

எனவே மேற்க்கண்ட மண்டல மதிப்பானது ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஈரோடு மாநகராட்சி மற்றும் கோபிசெட்டிபாளையம், பவானி, புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிகளைக் காட்டிலும் ஏற்கனவே 2008 பொது சீராய்வின் போது சத்தியமங்கலம் நகராட்சி மண்டல மதிப்பு மிக அதிகமாக நிர்ணயம் செய்யப்பட்டு விட்டது. எனவே, தற்போதைய சீராய்விலும் 100% சதவீதம் உயர்வதால் புதிய வரியானது இரண்டு மடங்கு அதிகரிப்பதால் பொது மக்கள் வரி செலுத்த முன்வரமாட்டார்கள். இதனால் நகராட்சிக்கும், நகர்மன்றத்திற்கும் பொது மக்களிடம் நம்பிக்கை இல்லாத தன்மை ஏற்படுவதும் மட்டுமல்லாமல் பல சங்கடங்கள் ஏற்படும் நிலை உருவாகிவிடும். எனவே, சொத்துவரி மண்டல மதிப்பினை அரசாணைப்படி குறைக்க இயலாததால், சொத்துவரி விகிதத்தை பொதுமக்களின் நலன் கருதி (வரிவிதிப்பாளர்கள்) கீழ்க்கண்டவாறு நகர் மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்களின் அறிவுறுத்தலின்படி மாற்றி அமைத்து கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**1. சொத்துவரி- அரைவருட வரிவிபரம்**

| விபரம் | பிரிவு 81(1), 81(3) |
|---|---|
| எந்தகாரியத்திற்காக | கட்டிடங்களும் கட்டிடங்களை சார்ந்த காலி நிலங்களும். விவசாயத்திற்கு பயன்படுத்தப்படாததும் கட்டிடங்களை சேர்ந்தாற்போல் இல்லாத காலி நிலங்கள் |

| | கட்டிடங்கள் வருட வாரியாக மதிப்பின் பேரில் |
|---|---|
| a)பொதுக் காரியங்களுக்குவரி | 2% |
| b) தண்ணீர் வரி | 1 % |
| c) உரக்கடைவரி | ½ % |
| d) துப்புரவுவரி | ½ % |
| e) விளக்குவரி | 1% |
| **அரை வருட வரி மொத்தம்** | **5%** |

**குறிப்பு:**

கல்வி வரி நீங்கலாக இதர அரை வருடவரி 5% சதவிகிதத்தில் இருந்து 10 % சதவிகிதம் (ஒவ்வொரு முழுசதுரடிக்கு 0.80 ( எண்பது பைசாவீதம்) நூல் நிலை செஸ் வசூலிக்கப்படும்.

**2) கல்வி வரி**

திருத்தப்பட்ட 1920ஆம் வருடத்திய தமிழ்நாடு ஆரம்ப கல்வி சட்டம் பிரிவு-34, 35-ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் இம்மன்றம் 1.4.2022ஆம் தேதியிலிருந்து சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கீழே குறிப்பிட்டுள்ள அட்டவணைப்படி கல்விவரி விதிக்க உத்தேசிக்கப்பட்டது.

| வ.எண். | கல்விவரி | அரைவருடவரி |
|---|---|---|
| 1. | கட்டிடங்களின் மீதும் கட்டிடங்களை சேர்ந்த காலி நிலங்களின் மீதும் மற்றும் விவசாயத்திற்கு பயன்படுத்தப்படாததும் கட்டிடங்களை சேர்ந்தாற் போல் இல்லாத காலி நிலங்கள் மீதும். | 1920ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 81(1) -ன் கீழ் கட்டிடங்களுக்கும் கட்டிடத்தை சேர்ந்தகாலி நிலங்களின் மீதும் வருடவாடகை மதிப்பின் பேரில் விதிக்கப்படும் 5% சொத்து வரியுடன் கூடுதலாக 2 ½% வரிவிகிதம். |

**அலுவலகக்குறிப்பு :**

1.மேற்படி உத்தேசிக்கப்பட்டுள்ள வரிவிதிப்பு சம்மந்தமாக 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளில் திருத்தப்பட்ட சட்டம் 78-ம் பிரிவின்படி அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் பொதுமக்களின் நலன் கருதி (வரிவிதிப்பாளர்கள்) பழைய வரிவிகிதத்தை மாற்றி மேற்கண்ட புதிய வரிவிகிதப்படி 01.04.2022 முதல் அரையாண்டு முதல் இந்நகராட்சி எல்லைக்குள் அரைவருட வரி விகிதப்படி வரி விதிக்க மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

2.மேற்படி, உத்தேசிக்கப்பட்டுள்ள வரிவிகிதம் சம்மந்தமான அறிவிப்பை நாளிதழ் மற்றும் மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்வதற்கான கட்டணத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந. க. எண்.626/2022/அ1)

தீர்மானம் எண் : 72 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரின் வேண்டுகோளின்படி பொதுமக்களின் நலன் கருதி வரி விகிதம் கீ ழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| a) | பொதுக் காரியங்களுக்குவரி | 2% |
| b) | தண்ணீர் வரி | 1 % |
| c) | உரக்கடைவரி | ½ % |
| d) | துப்புரவு வரி | ½ % |
| e) | விளக்கு வரி | 1% |
| **அரை வருட வரி மொத்தம்** | | **5%** |

மேற்கண்ட சொத்துவரி உட்கூறுகள் அடிப்படையில் (Property Tax component) இந்நகராட்சியில் 31.03.2022 ஏற்கனவே உள்ள அனைத்து சொத்துவரி இனங்களுக்கும் அட்டவணையில் கண்டுள்ளாறு சொத்துவரி சீராய்வு மண்டல மதிப்பு நிர்ணயம் செய்தும் மற்றும் பிரிவுகளை அங்கீகரித்தும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் : 4

அரசு ஆணை 92 ன்படி பொது ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி 26.04.2022 அன்று கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

**கச்சேரி வீதி.சத்திர வணிகவளாக கடை எண் -16**

| வ.எண் (1) | கடை எண் (2) | இனம் (3) | ஏலதாரரின் பெயர் (4) | பழையமாத வாடகை (5) |
|---|---|---|---|---|
| 1 | 16 | கச்சேரி வீதி சத்திர வணிக வளாக கடை | கே. விஜியலட்சுமி க/பெ.எஸ்.விஸ்வநாதன் சதாசிவம் வீதி.கோபி | 9200 /- |
| 2 | 16 | கச்சேரி வீதி சத்திர வணிக வளாக கடை | எஸ்.விஸ்வநாதன் த/பெ.சுப்பரமணி சதாசிவம் வீதி.கோபி | 9200 /- |

| சந்தை மார்கெட் மாத வாடைகை (6) | வழிகாட்டிமதிப்பு (PWD) மாத வாடகை (7) | குழு நிர்ணயம் மாத வாடகை (8) | உயர்ந்த பட்ச ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி மாத வாடகை (9) | உரிமை காலம் (10) | பொதுஏலம்(ம) ஒப்பந்தப்புள்ளி எத்தனைமுறை ஏலம் (11) |
|---|---|---|---|---|---|
| 3200 /- | 4260/- | 4620 /- | 6500 /- | ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு | 40 முறை |
| 3200/- | 4260/- | 4620/- | 6000/- | ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு | 40 முறை |

**அலுவலக குறிப்பு :**

மேற்கண்ட கடை 40 முறை பொது ஏலம் (ம) ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு வாடகைக்கு ஒருவரும் எடுக்க முன் வராத பட்சத்தில் 26.04.2022 அன்று திருமதி.கே.விஜியலட்சுமி கோபி செட்டிபாளையம் என்பவர் ரூ.6500 / பழைய மாத வாடகை காட்டிலும் குறைவாகவும் (ம) சந்தை மதிப்பு (PWD) வழிகாட்டி மதிப்பு குழு நிர்ணயம் மாத வாடகை காட்டிலும் அதிகமாக கேட்டுள்ளார். எனவே மாத வாடகை ரூ.6500/- உறுதி செய்திட மன்ற தலைவரின் முன் ஒப்புதல் பெற்று 16.05.2022 முதல் உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண் : 73 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. நாள் 28.6.2022

**பொருள் : 5**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.11, அத்தாணி ரோட்டில் அமைக்கப்பட்ட தினசரி மார்க்கெட்டில் கட்டண வசூல் செய்யும் உரிமம் திரு.எஸ். ஆர். முருகன் என்பவருக்கு உரிமம் வழங்கப்பட்டு அவரின் உரிமம் காலம் 31.03.2022 முடிவுற்றவுடன் அரசாணை எண். 181 ன்படி மீண்டும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட வந்த நிலையில் தினசரி மார்க்கெட் மேம்பாட்டு பணிக்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு வளர்ச்சித் திட்டம் 2021-2022 கீழ் ரூ.469/- இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவரின் ஆணை பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் தினசரி மார்க்கெட்டை மேற்கண்ட இடத்தில் புதிய கட்டுமான பணிகள் துவங்கவுள்ளதால், தினசரி மார்க்கெட் அருகில் உள்ள வாரச்சந்தைக்குள் செவ்வாய் கிழமை தவிர்த்து மற்ற நாட்களில் தற்காலிக கொட்டகை அமைத்து செயல்படுத்திடவும் தற்போது தினசரி மார்க்கெட்டை மாற்றி அமைத்திடவும் பழைய இடத்தின் குத்தகை உரிமத்தை ரத்து செய்திடவும் புதிய வாரச்சந்தைக்குள் தற்காலிகமாக தினசரி மார்க்கெட்டை சில நிபந்தனைகளுடன் புதிய இனமாக பொது ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் உத்திரவின்படி தற்போது உள்ள தினசரி மார்க்கெட்டை கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு வளர்ச்சி திட்டம் 2021-2022 ன் கீழ் புதியதாக கட்டுவதற்கு ரூ.469/- இலட்சத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணியினை துவக்கிட ஆணை வழங்கப்பட்டுள்ளதால், பழைய மார்க்கெட்டை இடித்து புதியதாக கட்டுமான பணி துவக்கப்பட உள்ளதால் தினசரி மார்க்கெட்டை கீழ் கண்ட நிபந்தணைகளுக்கு உட்ப்பட்டு தற்காலிகமாக வாரச்சந்தைக்குள் அமைத்திடமன்றம் அனுமதிக்கலாம்.

1.தற்காலிக வாரச்சந்தையின் பகுதியில் தற்காலிக செட் அமைத்து கொள்ளுதல்
2.தற்காலிக குடிநீர் மற்றும் கழிப்பிடம் அமைத்துக் கொள்ளுதல்
3.மேற்கண்ட உரிமம் இனம் 31.03.2023 வரை உள்ள காலத்திற்கு மட்டும் அல்லது கட்டுமான பணிகள் முடியும் வரை உள்ள காலத்திற்கு மட்டும்.

4.தினசரி மார்க்கெட் திங்கட்கிழமை இரவு12 மணி வரைக்குள் அகற்றி கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
5.செவ்வாய் கிழமை வாரச்சந்தை வியாபாரம் நடைபெறுவதால், அன்றை தினம் மார்க்கெட் வியாபாரிகள் விடுமுறைஅளிக்கப்படவேண்டும்.
6.மற்ற நிபந்தனைகள் 2021-2022 ம் ஏலம் அறிக்கைகளுக்கு உட்பட்டது.
7.வாரசந்தைக்குள் குத்தகைதாரர் மின்சார வசதி மற்றும் கண்காணிப்பு கமிர பொறுத்திக் கொள்ளுதல்.

மேலும் நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1200/2020/அ3

தீர்மானம் எண் : 74 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. நாள் 28.6.2022

பொருள் : 6

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான தினசரி மார்க்கெட்டில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம், 31.03.2022 ம் தேதியுடன் முடிவடைவதையொட்டி, மேற்கண்ட இனம் 25.01.2022 ம் தேதி முதல் பொது ஏலம் ( ம) ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. ஆனால் ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளிகள் கோர யாரும் முன்வராத நிலையில் 2022 நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலுக்கான தேதிகள் அறிவிக்கப்பட்டதால், தேர்தல் விதி நடைமுறைக்கு வரப்பட்டதால், ஏலம் விடுவதை ஒத்தி வைக்கப்பட்டது. நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் முடிவுற்று நடத்தை விதிகள் அமுலுக்கு வரப்பட்டதை தொடர்ந்து, 22.03.2022 ம் தேதி முதல் பொது ஏலம் கோரப்பட்டு வரும் நிலையில், மேற்கண்ட இனம் மேலும் ஏலம் கோர முன்வரவில்லை, இந்நிலையில் உரிமம் காலம் 31.03.2022 ம் தேதி முடிவடைவதால், இதன் உரிமம் இனம் பொது ஏலத்தில் எடுக்கும் வரை பழைய குத்தகை வாடகையினை கணக்கிட்டு, பழைய ஏல உரிமைதாரர் திரு. எஸ். ஆர். முருகன் அவர்களுக்கு மேலும் ஜூன் 2022 வரை ஒரு மாதத்திற்கு நிர்வாக நலன் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கியமைக்கு மன்றப் பொருள் வரைவு ஓப்புதலுக்கு

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

(ந. க. எண். 1200/2020/அ3)

தீர்மானம் எண் : 75 அனுமதி வழங்கப்பட்டது. நாள் 28.6.2022

பொருள் : 7

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந. க. எண். 79057/1996/எல் 3 நாள். 17.12.1996 இல் தெரிவிக்கப்ட்டுள்ள விதிமுறைகளின்படி, சத்தியமங்கலம் நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களின் அலுவலகம், வீடு மற்றும் துணைத்தலைவர் அவர்களின் வீட்டிற்கு தொலைபேசி இணைப்பு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந. க. எண். 1015/2022/சி1)

தீர்மானம் எண் : 76 அனுமதி வழங்கப்பட்டது. நாள் 28.6.2022

பொருள் : 8

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.20 பழைய தபால் தெற்கு வீதி 2 மற்றும் 3 இல் நுழையும் இடத்தில் சிறுபாலம் இல்லாததால் இரண்டு சக்கர வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் சாலையில் செல்வதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே அப்பகுதியில் சிறுபாலம் அமைத்து தர கோரி இந்நகர் மன்ற 20 வது வார்டு உறுப்பினர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். மேற்கண்ட இடத்தில் புதிதாக சிறுபாலம் அமைக்க உத்தேச மதிப்பீடு **ரூ.1.30 இலட்சம்** ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் 2022-2023 ஆம் ஆண்டு வருவாய் நிதி திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

(ந. க. எண். 100/2016/சி1)

தீர்மானம் எண் : 77 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. நாள் 28.6.2022

பொருள் : 9

சத்தியமங்கலம் நகராட்சியில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோக பணிகள் மேம்பாடு செய்யும் பணிக்கு (Improvements of Water supply Scheme) விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பொருட்டு தனியார் ஆலோசகர் நியமனம் செய்ய இந்நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 06.05.2022 அன்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | M/s.SSG Engineering No.16 12/1 1 st Floor, Kasthuribai Nagar, 2nd Cross Street Adyar, Chennai | திட்ட மதிப்பீட்டில் இருந்து 0.75% சதவீதம் (GST Exclusive) |
| 2 | M/s.ECT Infra Solutions Pvt Ltd, No.13/1 Third Canal Cross Road, Gandhi Nagar Adyar, Chennai -600020 | திட்ட மதிப்பீட்டில் இருந்து 1.25% சதவீதம் (GST Exclusive) |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s.SSG Engineering No.16 12/1, 1st Floor Kasthuribai Nagar, 2nd Cross Street Adyar, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியில் திட்ட மதிப்பீட்டிலிருந்து 0.75% சதவீதம் (GST Exclusive) விரிவான திட்ட அறிக்கை தயாரித்து வழங்குவதாக தெரிவித்துள்ளார்கள். எனவே, திட்டத்தின் கருத்தில் கொண்டு ஒப்பந்தப்புள்ளி ஏற்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைவான விலை M/s.SSG Engineering No.16 12/1, 1st Floor Kasthuribai Nagar 2nd Cross Street, Adyar, Chennai அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.
3) இந்நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கப்பட்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கப்படுகிறது.

(ந. க. எண். 690/2021/இ1)

தீர்மானம் எண் : 78 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. நாள் 28.6.2022

பொருள் : 10

15வது நிதிக்குழு மான்யம் (Tied Grant) 2021-2022 திடக்கழிவு மேலாண்மை பணி அலகில் கீழ்கண்ட கழிப்பிட பணிகளுக்கு 21.01.2022 இல் வேலை உத்திரவு வழங்கப்பட்டது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூஇலட்சத்தில்) |
|---|---|---|
| | **Tied Grant** | |
| 1 | சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட தாய் சேய் நல விடுதி வளாகத்தில் நான்கு இருக்கைகள் கொண்ட கழிப்பிடம் கட்டுதல் | 5.00 |
| 2 | சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட திருவள்ளுவர் திடல் நுண் உயிரி மைய வளாகத்தில் நான்கு இருக்கைகள் கொண்ட கழிப்பிடம் கட்டுதல் | 5.00 |
| 3 | சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட பழைய பேருந்து நிலைய வணிக வளாகத்தில் நான்கு இருக்கைகள் கொண்ட கழிப்பிடம் கட்டுதல் | 5.00 |

மேற்கண்ட பணிகளுக்கு திரு.ஆர்.ஆறுமுகம் ஒப்பந்ததாரர் சத்தியமங்கலம் அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு, பணி காலம் முடிந்தும் பணி இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. ஒப்பந்ததாரருக்கு அறிவிப்பு வழங்கியதற்கு ஒப்பந்ததாரர் தனது கடிதத்தில் தனக்கு உடல் நிலை சரி இல்லாத காரணத்தால் மேற்கண்ட மூன்று பணிகளையும் இரத்து செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2) ஒப்பந்ததாரர் விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளவாறு மூன்று பணிகள் இரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்
3)திட்டப்பணி என்பதால், நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிட்டதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க. எண். 1770/2021/இ1)

தீர்மானம் எண் : 79 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. நாள் 28.6.2022

பொருள் : 11

சத்தியமங்கலம் நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோகம் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு சுமார் 40 வருடங்களுக்கு மேலாகி விட்டது. தற்பொழுது அம்ருத்-2.0 திட்டத்தின் கீழ் ரூ.35.67 கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு புதிதாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளி கோர ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் தினதந்தி தினசரி செய்திதாளில் 05.05.2022 இல் விளம்பரம் செய்தமைக்கு ரூ.2206/- தொகை வழங்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு:
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம், 2022-2023 ஆம் ஆண்டு திருத்திய வரவு-செலவு பட்டியல் சேர்த்துக்கொள்ளலாம்.

(கட்டு எண்.690/2022/இ1)

தீர்மானம் எண் : 80 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. நாள் 28.6.2022

பொருள் : 12

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.20-இல் பண்ணாரி நெடுஞ்சாலையிலிருந்து பிரிந்து செல்லும் கோட்டுவீராம்பாளையம் 2 நெ பேருந்து நிறுத்தம் முதல் நரசிம்மன் மருத்துவமனை வரை உள்ள தார் சாலை மிகவும் பழுதடைந்து குண்டும் குழியுமாக உள்ளது. இதனால் வாகனங்கள் செல்வதில் மிகவும் சிரமம் ஏற்படுகிறது. எனவே மேற்கண்ட சாலை தற்காலிகமாக WMM கொண்டு சீர் செய்ய உத்தேச செலவினம் ரூ.70,000/- ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
1)மன்றம் அனுமதிக்கலாம்
2)இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம், 2022-23 ஆம் ஆண்டு திருத்திய வரவு-செலவு பட்டியல் சேர்த்துக்கொள்ளலாம்.

(ந. க. எண். 418/2022/இ1)

தீர்மானம் எண் : 81 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. நாள் 28.6.2022

பொருள் : 13

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.11 இல் உள்ள ராஜீவ் நகர் பூங்கா உள்ளது. அந்த பூங்காவில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரையில் நல்ல முறையில் பயன்படுத்தி வருகிறார்கள். அதில் உள்ள ஆழ்குழாய் கிணற்றில் இருந்து வரும் பைப்புகள் மற்றும் Trip பைப்புகள் மற்றும் சிறுவர்கள் விளையாடும் விளையாட்டு சாமன்கள் பழுதடைந்து உபயோகப்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே, மேற்கண்ட பைப்புகள் மாறுதல் செய்யவும், Trip பழுதுகள் நீக்கம், விளையாட்டு பொருட்கள் மற்றும் மின் விளக்குள் அனைத்தும் மாற்றம் செய்ய மதிப்பீடு ரூ.2.20 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1)மன்றம் அனுமதிக்கலாம்
2)இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம், 2022-23 ஆம் ஆண்டு திருத்திய வரவு-செலவு பட்டியல் சேர்த்துக்கொள்ளலாம்.

(ந. க. எண். 418/2022/இ1)

தீர்மானம் எண் : 82 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. நாள் 28.6.2022

**பொருள் : 14**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.8 அன்னையன் கிழக்கு வீதியில் உள்ள HDPE Tank மற்றும் பிளாட்பாரம் உடைந்துவிட்டது. இதனால் பொதுமக்கள் பொது உபயோகத்திற்கு தண்ணீர் இன்றி மிகவும் சிரமப்பட்டு வருவதாக 8 வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் கடிதம் வழங்கியுள்ளார். எனவே, அந்த HDPE Tank Platform அகற்றம் செய்து விட்டு புதிததாக பிளாட் பார்ம் அமைத்து HDPE Tank 2000 lit புதிதாக அமைக்கவும் மதிப்பீடு ரூ.90000/- க்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1)மன்றம் அனுமதிக்கலாம்
2)இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம், 2022-23 ஆம் ஆண்டு திருத்திய வரவு-செலவு பட்டியல் சேர்த்துக்கொள்ளலாம்.

(ந. க. எண். 418/2022/இ1)

தீர்மானம் எண் : 83 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. நாள் 28.6.2022

**பொருள் : 15**

தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0 - 2021-22 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண்.9 மற்றும் 17 இல் அண்ணா நகர் மற்றும் தோப்பூர் காலனி பகுதியில் சமுதாய கழிப்பிடம் கட்ட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.5990/2022/SBM நாள்.11.04.2022 இன்படி ரூ.49.92/- இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டது. முறையே தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோர மாவட்ட அளவில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தினதந்தி தினசரி செய்திதாளில் விளம்பரம் செய்தமைக்கு **ரூ.4413/- தொகை** வழங்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம், 2022-2023 ஆம் ஆண்டு திருத்திய வரவு-செலவு பட்டியல் சேர்த்துக்கொள்ளலாம்.

(கட்டு எண்.737/2022/இ1)

தீர்மானம் எண் : 84 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. நாள் 28.6.2022

**பொருள் : 16**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.27 ரங்கசமுத்திரம் சந்து எண்.11 இல் உள்ள HDPE Tank Platform உடைந்துவிட்டது. மேலும், அதில் வைக்கப்பட்டுள்ள HDPE Tank பழுதடைந்து உடைந்து தண்ணீர் வீணாகி கொண்டுள்ளது. இதனால் பொதுமக்கள் பொது உபயோகத்திற்கு தண்ணீர் இன்றி மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர் என நகர் மன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் புகார் தெரிவித்து வந்துள்ளார்கள். எனவே, மேற்கண்ட இடத்தில் ஏற்கனவே உள்ள உடைந்த பிளாட்பாரம் அகற்றம் செய்து புதிதாக பிளாட்பாரம் அமைக்கவும், HDPE Tank 2000 lit புதிதாக வாங்கி பொருத்த உத்தேச செலவினம் ரூ.90,000/- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1)மன்றம் அனுமதிக்கலாம்
2)இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம், 2022-23 ஆம் ஆண்டு திருத்திய வரவு-செலவு பட்டியல் சேர்த்துக்கொள்ளலாம்.

(ந. க. எண். 418/2022/இ1)

தீர்மானம் எண் : 85 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. நாள் 28.6.2022

பொருள் : 17

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.27 ரங்கசமுத்திரம் சந்து எண்.12 இல் நகராட்சிக்கு உட்பட்ட நடுநிலைப்பள்ளி உள்ளது. பள்ளிக்கு செல்லும் பிரதான சாலை மைசூர் டிரங்க் சாலையில் இதில் கனரக வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் அதிகமாக செல்வதால் பள்ளிக்கு செல்லும் மாணவர்கள் மிகவும் சிரமத்துக்குள்ளாகின்றனர். பள்ளிக்கு செல்லும் சாலையான கான்கிரீட் சாலையாகவும், சாய்வு தளம் மிகவும் சாய்வாக உள்ளது. இதனால் பள்ளியில் இருந்து வரும் வாகனங்கள் மைசூர் சாலையில் நடுவே செல்ல வேண்டி உள்ளது. இதனால் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றது. எனவே, மேற்கண்ட கான்கிரீட் சாலை சாய்தளத்தின் சரி செய்து வாகனங்கள் நின்று செல்லும் வண்ணம் கான்கிரீட் சாலை அமைக்கவும், இதே போல் ஸ்டேசன் அருகில் உள்ள Primary Health Centre பிரதான சாலையில் இருந்து உள்ளே செல்ல சாய்வுதளம் மற்றும் ரங்கசமுத்திரம் நடுநிலை பள்ளி காம்பவுன்ட் சுவர் அமைக்க வேண்டி உள்ளது. மேற்கண்ட இரண்டு பணிகளுக்கு மதிப்பீடு **ரூ.3.50 இலட்சம் ஆகும்.** இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1)மன்றம் அனுமதிக்கலாம்

2)இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம், 2022-23 ஆம் ஆண்டு திருத்திய வரவு-செலவு பட்டியல் சேர்த்துக்கொள்ளலாம்.

(ந. க. எண். 418/2022/இ1)

தீர்மானம் எண் : 86 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. நாள் 28.6.2022

பொருள் : 18

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட கழிப்பிடங்கள், உருமையன் வீதியில் உள்ள கழிப்பிடங்கள் கோட்டுவீரம்பாளையம் பகுதியில் உள்ள கழிப்பிடம், பாரஸ்ட் டிப்போ சாலையில் உள்ள கழிப்பிடங்கள், பேசின்கள், கதவுகள், தண்ணீர் குழாய்கள், தரைதளம் டைல்ஸ்கள் மற்றும் இதர கழிப்பிடங்களில் உள்ள வாஷ்பேசின்கள், மின் விளக்குள் எலக்டரிக் வேலை மற்றும் பழுதுகள் நீக்கம் செய்ய வேண்டி உள்ளது. எனவே, மேற்கண்ட கழிப்பிடங்கள் மரமத்து பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் **ரூ.1.00 இலட்சம்** ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1)மன்றம் அனுமதிக்கலாம்

2)இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம், 2022-23 ஆம் ஆண்டு திருத்திய வரவு-செலவு பட்டியல் சேர்த்துக்கொள்ளலாம்.

(ந. க. எண். 418/2022/இ1)

தீர்மானம் எண் : 87 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. நாள் 28.6.2022

பொருள் : 19

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்களின் கடித ந.க.எண்.5990/2022/SBM நாள்.11.04.2022 இன்படி 2021-2022 ஆம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0 சமுதாய கழிப்பிடம், பொதுக்கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிக்குமிடம் ஆகிய பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மண்டல செயற் பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு மாவட்ட அளவில் ஒப்பந்தப்புள்ளி 27.05.2022 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1) வேலையின் பெயர்: சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட தோப்பூர் காலனி பகுதியில் 16 இருக்கைகள் மற்றும் 3 சீறுநீர் கழிக்குமிடம் கொண்ட சமுதாய கழிப்பிடம் கட்டுதல் மதிப்பீடு ரூ.24.96 இலட்சம்

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | Thiru.R.Arumugam Contractor Sathyamangalam | ரூ.24.96 இலட்சம் | ரூ.2163467/- | மதிப்பீடு தொகையினை விட 4.98 % அதிகம் |
| 2 | M/s.Vino | | ரூ.2176353/- | மதிப்பீடு |

| | | | | |
|---|---|---|---|---|
| | Constructions Contractor Bhavani Sagar | | | தொகையினை விட 5.60 % அதிகம் |

2) வேலையின் பெயர்: சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட அண்ணா நகர் காலணி பகுதியில் 16 இருக்கைகள் மற்றும் 3 சீறுநீர் கழிக்குமிடம் கொண்ட சமுதாய கழிப்பிடம் கட்டுதல் மதிப்பீடு ரூ.24.96 இலட்சம்

| வ.எண். | ஒப்பந்ததாரா் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | M/s.Vino Constructions Contractor Bhavani Sagar | ரூ.24.96 இலட்சம் | ரூ.2163467/- | மதிப்பீடு தொகையினை விட 4.98 % அதிகம் |
| 2 | Thiru.K.P.Murugusamy 188/2 Ganeshapuram Puliampatti Road Nambiyur | | ரூ.2176353/- | மதிப்பீடு தொகையினை விட 5.60 % அதிகம் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Sl.No.(1)Thiru.R.Arumugam Contractor Sathyamangalam Sl.No.(2)M/s.Vino Constructions Contractor Bhavani Sagar அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை மதிப்பீடு தொகையினை விட 4.98 சதவீதம் கூடுதலாக வழங்கியுள்ளார்.எனவே,விலை குறைத்து தர கோரி M/s.Vino Constructions, Contractor, Bhavani Sagar and Thiru.R.Arumugam Contractor Sathyamangalam நிறுவனத்திற்கு Negotitaion Letter விலை குறைக்கும் கடிதம் அனுப்பபட்டது. மேற்கண்ட ஒப்பந்தததாரா் 27.05.2022 அன்று தனது கடிதத்தில் மூல பொருட்கள் மற்றும் திறமைவாயந்த கூலி ஆட்கள் நகர பகுதியில் இல்லாத காரணத்தால், வெளியூர் இருந்து வரவழைத்து பணிகள் பார்க்கப்பட வேண்டியுள்ளதால் தனது விலை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார்கள். எனவே, மேற்கண்ட இரண்டு பணிகளுக்கு 4.98 சதவீதத்திலிருந்து குறைக்க இயலாது என்று தெரிவித்துள்ளார்கள். எனவே, அரசு திட்டப்பணி என்பதால் மதிப்பீடு தொகைக்கு 4.98 சதவீதத்திற்கு கூடுதலாக வழங்கவும்,ஒப்பந்தப்புள்ளி ஏற்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக மதிப்பீட்டை விட 4.98 % அதிகமாக பணி செய்து கொடுக்க வினோ கன்ஸ்டரக்ஸன்ஸ் மற்றும் திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரா் சம்மத கடிதம் அழைப்பு என்பதாலும் உரிய காலத்தில் பணி முடிக்கப்பட வேண்டும் என்பதாலும்
